பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 08 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுதந்திரப் போராட்டத்தில் நாட்டு மக்களை வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஒன்றிணைத்ததாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. இல்லந்தோறும் தேசியக் கொடி ஏற்றும் இயக்கம் இன்று தொடங்கியது. இதனை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டுமென்று பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தில்லி மதுபான முறைகேடு வழக்கில் திரு மணிஷ் சிசோடியாவுக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது.

4. தமிழகத்தில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் 'தமிழ் புதல்வன்' திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று கோவையில் தொடங்கி வைத்தார்.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியினருக்கு இன்று மக்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

----- இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

சுதந்திரப் போராட்டத்தில் நாட்டு மக்களை வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஒன்றிணைத்ததாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வெள்ளையனே வெளியேறு இயக்க தினத்தையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் தேசப்பிதா காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட இந்த இயக்கத்தில் சேர்ந்த அனைவருக்கும் தலைவணங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான முக்கிய பங்களிப்பை இந்த இயக்கம் செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடுதலைப் போராட்ட இயக்கம் தற்போதைய சூழ்நிலையிலும் மக்களின் குரலாக ஒலிக்கிறது என்று குறிப்பிட்டுள்ள பிரதமர், ஊழல், வாரிசு அரசியல், போலி வாக்குறுதி அரசியல் ஆகிய நிலைகளிலிருந்து மீட்டெடுக்கும் குரலாகவும் உள்ளதாகக் கூறியுள்ளார்.

வெள்ளையனே வெளியேறு இயக்க தினத்தையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்துக்கு எதிராக வீரத்துடன் குரல் கொடுத்த விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் தமது வணக்கத்தை தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய தூண்டுகோலாக இருந்தது என்றும் அந்த பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளையனே வெளியேறு இயக்க தினத்தையொட்டி தேசப்பிதா மகாத்மா காந்தி மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இன்று மக்களவையில் மரியாதை செலுத்தப்பட்டது.

[]<<<>>>[]

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் இன்று தொடங்கியது.

நாட்டு மக்கள் அதிக அளவில் தேசிய கொடியுடன் தங்களது செல்பி புகைப்படத்தை ஹர்-கர் திரங்கா இணையதளத்தில் பகிர்ந்து வருகின்றனர்.

இது குறித்து காணொலி பதிவில் பகிர்ந்துள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் தங்களது இல்லங்களில் தேசிய கொடியை ஏற்றி நமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மாபெரும் மக்கள் இயக்கமாக இதனை மாற்ற வேண்டுமென்று வலியுறுத்தியுள்ள பிரதமர், ஒவ்வொருவரும் தங்கள் செல்போன்களில் அடையாள புகைப்படமாக தேசிய கொடியை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் தமது செல்போனிலும் தேசியக் கொடியை பகிர்ந்துள்ளார்.

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தையொட்டி வரும் 11-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரை பிஜேபி அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்துள்ளது.

இதனையொட்டி பிஜேபி பொதுச்செயலாளர் திரு தருண் **chugh** வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களிலும் பிஜேபி சார்பில் மலர்மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

வரும் 14-ஆம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் கட்சியின் சார்பில் அமைதி பேரணி நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அனைத்து வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் மூவர்ண தேசியக்கொடி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

ரஷ்ய ராணுவத்தில் இந்தியர்கள் சேர்ந்தது தொடர்பாக 91 வழக்குகள்பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், இந்த வழக்கில் தொடர்புடைய எட்டு பேர் காலமாகி விட்டதாகவும், 14 பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ரஷ்ய ராணுவம் கைது செய்துள்ள 69 இந்தியர்கள் விடுதலைக்காக காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பிரச்சினை குறித்து இந்தியா தனது கடுமையான எதிர்ப்பை ரஷ்யாவிடம் தெரிவித்ததாகவும், இது தொடர்பாக அந்நாட்டு வெளியுறவத்துறை அமைச்சரிடம் தாம் பலமுறை பேசி இருப்பதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

கடந்த மாதம் பிரதமர் திரு நரேந்திரமோடி ரஷ்யா சென்றிருந்தபோது ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் ராணுவத்தின் பிடியில் உள்ள இந்தியர்களை விரைந்து விடுவிக்க உறுதி அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தில்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முன்னாள் துணை முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவருமான திரு மணிஷ் சிசோடியா-வுக்கு உச்சநீதிமன்றம் இன்று ஜாமின் வழங்கியது..

இது தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், திரு சிசோடியா 17 மாதங்களாக இந்த வழக்கில் சிறையில் இருந்து வருவதாகவும், ஆனால் இதுவரை விசாரணை தொடங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அமலாக்கப்பிரிவு மற்றும் சி பி ஐ தாக்கல் செய்த வழக்குகளில் திரு மணிஷ் சிசோடியா-வுக்கு ஜாமீன் வழங்கியுள்ளதாகவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஆறு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ் புதல்வன்’ திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று கோவையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கும் நோக்கில் இந்த திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளதாகக் கூறினார்.,

ஏற்கனவே மாணவிகளுக்காக கொண்டுவரப்பட்ட புதுமைப்பெண் திட்டத்தில் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயன்பெற்று வருவதாகத் அவர் தெரிவித்தார்.,

பள்ளிப் படிப்பை முடிக்கும் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மாணவ மாணவியர் கல்வி கற்பதற்கு எந்த ஒரு தடையும் இருக்கக்கூடாது என்றும் திரு மு க ஸ்ஸ்டாலின் கூறினார்.

[]<<<>>>[]

நாட்டின் சுதந்திர தினத்தையொட்டி சென்னை விமான நிலையத்தில் ஏழு அடுக்கு பாதுகாப்பு அமல்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு விமான பயணிகள் ஒன்றரை மணி நேரமும், சர்வதேச விமான பயணிகள் மூன்றரை மணி நேரம் முன்னதாகவும் விமான நிலையத்துக்கு வர வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேகா ) --55 செகண்ட்*

[]<<<>>>[]

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த பேச்சுக்களை காலம் தாழ்த்தாமல் விரைந்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இருநாடுகளும் மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்கா, எகிப்து, கத்தார் ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இம்மாதம் 15-ஆம் தேதி தோஹா மற்றும் கெய்ரோவில் நடைபெறவுள்ள சமரச பேச்சுவார்த்தைகளின்போது இடைவெளிகளைக் குறைத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்றும் அந்நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

[]<<<>>>[]

நாடு முழுவதும் அடுத்த ஏழு நாட்களுக்கு பரவலான மழைக்கு வாய்பபு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.,

நாட்டின் வடகிழக்கு மற்றும் மேற்கு இமயமலை பகுதிகளில் ஒருவார காலத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு-கஷ்மீர் லடாக் பகுதிகளில் வரும் 14-ஆம் தேதி வரை மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

தீபகற்ப பகுதிகளில் அடுத்த ஏழு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாகே உள்ளிட்ட பகுதிகளில் ஒரு சில இடங்களில் மிதமாக மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கும், வெண்கலப்பதக்கம் வென்ற ஹாக்கி அணியினருக்கும் இன்று மக்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா, வரலாற்று சிறப்புமிக்க இந்த வெற்றி விளையாட்டுத்துறையில் உள்ள அனைத்து இளைஞர்களையும் ஊக்கப்படுத்தும் என்று தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஒலிம்பிக் போட்டியின் மல்யுத்தப் பிரிவில் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் **Aman Sehrawat** இன்று பங்கேற்கிறார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் **Puerto Rico-**வின் **Darian Cruz-**ஐ அவர் எதிர்கொள்கிறார்.

400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் இன்று பங்கேற்கின்றன.

கோல்ஃப் பிரிவில் அதிதி அசோக், தீக்ஷா தாகர் ஆகியோர் மூன்றாவது சுற்றில் இன்று பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

தைவான் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-1, 3-6, 6-3 செட்கணக்கில் ஜப்பானின் கோக்கோரோ இசோமுராவை வென்றார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - நிக்கி கலியந்தா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

பிரிஸ்பேனில் நடைபெற்ற இந்தியா-ஏ மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா-ஏ அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

***End of News***